# பெல்மதுள்ள பிரதேச சபையின் 2025.11.12 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

| | | |
|---|---|---|
| 02. | கௌரவ பிரதேச சபை உப தலைவர் | - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன |
| 03. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன |
| 04. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம |
| 05. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன |
| 06. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர |
| 07. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.டப்ளிவ். நிர்மிக தீபால் அபேவர்தன |
| 08. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே.ஜீ. சந்திரலால் |
| 09. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே |
| 10. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க |
| 11. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர |
| 12. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார |
| 13. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர |
| 14. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார |
| 15. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த |
| 16. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார |
| 17. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த |
| 18. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. மயூரி சத்துரிக்கா பரணமான்ன |
| 19. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி |
| 20. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. இராஜேந்திரன் திசோக் |
| 21. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ. இந்திக்க குமார |
| 22. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன |
| 23. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஆர். தனேஸ் குமரன் |
| 24. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா |
| 25. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி |
| 26. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட |
| 27. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால் |
| 28. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன |
| 29. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க |
| 30. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. ஏ.பீ. ஜகத் சேனாரத்தின |
| 31. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி |
| 32. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ் |
| 33. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி |
| 34. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன |
| 35. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ். ஜெஹன் மோஹன் |
| 36. | கௌரவ பிரதேச சபை உறுப்பினர் | - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல |

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ உப தலைவர், கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. கடந்த பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல். (2025.10.08)

2025.10.08 ஆம் திகதி நடைபெற்ற விசேட பொது சபைக் கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த்த பிரேமகுமார பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். - இல்லை

03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எச்.ஜீ. சச்சினி செவ்வந்தி பொது சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்கவில்லை, அத்துடன் அவர் லீவுக்கு விண்ணப்பிக்காததால் அவருடைய லீவு அனுமதி வழங்கப்படவில்லை.

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :-**

உள்ளூராட்சித் தினைக்களத்தின் CLG/AC/04/05/13 மற்றும் 2025.10.10 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் நடத்தப்படும் ஊழல் எதிர்புச் சட்டம் மற்றும் நேர்மை பற்றி உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களை தெளிவுபடுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2025.11.26 அம் திகதி மு.ப. 09.00 மணியிலிருந்து பி.ப. 02.30 மணி வரை கேட்போர்கூடம், சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி என்ற இடத்தில் நடைபெற உள்ளது. இந்த பயிற்சி நிகழ்ச்சிக்கு அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை

06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. 2025.09.11 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தில் முடிவுகள் இலக்கம் 26 இன் கீழ் எடுக்கப்பட்ட முடிவிற்கு ஏற்ப, களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் 02 களியாட்ட வரிகள் விதித்து அறவிட்டுக் கொள்வதற்கு சட்டரீதியான விதிகள் இல்லை என்பதனால் களியாட்ட வரியானது 15% ஆக விதித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01**

அதன் அடிப்படையில் பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் உள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் வெளியில் இருந்து வரும் விண்ணப்பதாரர்களிடமிருந்து 15% களியாட்ட வரி அறவிட்டுக் கொள்வது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

2. 2025.07.14 ஆம் திகதி சன்னஸ்கம தேயிலைத் தொழிற்சாலையின் நிறைவேற்று அதிகாரி இரத்தினபுரி வீதி இடது பக்கம் 1225/4 என்ற மதிப்பீட்டு வரி இலக்கம் கொண்ட தேயிலை தொழிற்சாலையின் மதிப்பீட்டு வரிக்காக சலுகை தருமாறு கோரியிருந்த கடிதத்திற்கு ஏற்ப, 50% கழிவு ஒன்று வழங்குவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திடம் வினவிய போது அதற்கமைய இந்த தொழிற்சாலை மூடப்பட்டு இருந்த கால எல்லைக்கு உரிய (2024/2025 வருடங்களுக்கு) செலுத்த வேண்டிய மதிப்பீட்டு வரித் தொகையில் 50% ஆன ரூபா. 193,477.68 தொகைக்கான கழிவு வழங்குவதற்காக பொது சபைக் கூட்டத்தில் முடிவு அவசியமானது என்று தெரியப்படுத்தி உள்ளதால் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.பீ. சான்த குமார குடாவத்த அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 02**

இரத்தினபுரி வீதி இடது பக்கம் 1225/4 என்ற மதிப்பீட்டு வரி இலக்கம் கொண்ட தேயிலை தொழிற்சாலை மூடப்பட்டு இருந்த கால எல்லைக்கு உரிய (2024/2025 வருடங்களுக்கு) செலுத்த வேண்டிய மதிப்பீட்டு வரித் தொகையில் 50% ஆன ரூபா. 193,477.68 தொகைக்கான கழிவு வழங்குவதற்காக ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. கல்லேபிட்ட தகனசாலை காணியில் இறுதி கிரியை விழா மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள், ஹெல போஜுன் ஹல நிர்மாணிப்பதற்கு கல் உலுவஸ்ஸாஹேன காணியில் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து பொறியியலாளர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு ஏற்ப 04 கோடிகள் செலவாகும் என்றும், இந்த சந்தர்ப்பத்தில் ஹெல போஜுன் ஹல ஒன்று நிர்மாணிப்பது சிக்கலான விடயம் என்பதால் தற்போது உள்ளூராட்சி அமைச்சினால் 150 இலட்சம் கிடைக்கப் பெறுவதால், அதற்கு உகந்த விதத்தில் கல்லேபிட்ட தகனசாலை காணியில் இறுதி கிரியை விழா மண்டபம் ஒன்றை நிர்மாணித்தல் தொடர்பான பிரேரணை உள்ளூராட்சி அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டதுடன் அதன் பின்னர் இப் பிரேரணைக்கான அனுமதி உள்ளூராட்சி அமைச்சினால் கிடைக்கப்பெற்றுள்ளது என்பது தெரிவிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 03**

கல்லேபிட்ட தகனசாலை காணியில் இறுதி கிரியை விழா மண்டபம் ஒன்றை நிர்மாணித்தல் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட வரைபிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள், தெரிவித்தது 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பின்னர் இந்த நாட்டில் தோன்றிய பல அரசியல் கட்சிகள் ஆட்சி செய்ததோடு, 75 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டிற்கு குறிப்பிட்ட அளவிலான விடயங்களை செய்து உள்ளன. ஆனால் 2022, 2023 இற்கு இடைப்பட்ட காலத்தில் எங்கள் நாடு பொருளாதார ரீதியில் பைத்தியக்காரத்தனமான நிலைக்கு ஆளானது. அதனுடன் உலக அரங்கில் சர்வதேச நாடுகள் எங்களை தனிமைப்படுத்தின. நாடுகளுக்கு உள்நுழைவதற்கு உள்ள சந்தர்ப்பங்கள் இல்லாது போனது, விசாக்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டன, அதுவரை பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்காக எங்களுக்கு வழங்கப்பட்ட கால எல்லை முடிவுக்கு வந்தது, கைக் காசிற்கு பொருட்கள் வாங்கும் முறை ஏற்பட்டது, அத்துடன் நாடு ஒரு பாரிய நெருக்கடி நிலையை நோக்கி சென்றது அப்போது எங்கள் நாட்டு மக்கள் தமது அரசியல் முடிவுகளை கைவிட்டு பொதுவான முடிவு ஒன்றை எடுத்தனர். முதன் முறையாக 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பாராளுமன்ற தேர்தலில் அதை உறுதிப்படுத்தினார்கள். அதன் அர்தம் தேசிய மக்கள் சத்தி அரசிற்கு குறைந்தது 05 வருட காலத்திற்கு தமது சொந்த வேலைத் திட்டத்தை நாட்டிற்கு முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்கு ஏற்ப அவ் முன்று தேர்தல்களிலும் பொதுவாக பொதுமக்கள் குறிப்பிட்ட பெரும்பான்மை பலத்தை தேசிய மக்கள் சக்திக்கு சுய கொள்கை மற்றும் நோக்கம் இந்த நாட்டின் குடிமக்களுக்கு முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அப்படி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு வருட காலம் கடந்து போயுள்ள போதிலும் இன்னும் முன்னுக்கு காலம் இருக்கிறது. ஏதேனும் ஓர் விதத்தில் நாடு என்ற ரீதியில் உரிய காலத்தினுள் வெற்றிகரமாக அல்லது தோல்வியாக செய்து முடிப்பதற்கு பெரும்பாலும் இந்த நாட்டில் அரசியல் பிரவேகங்கள் இடவசதிகள் செய்து கொடுத்துள்ளன. அவற்றிற்கு இடையூறுகள் செய்ய முடியாது. வரலாற்று பாடங்களில் இருந்து நாம் இந்த நாட்டு மக்கள் எடுக்கும் முடிவுகளை செயல்படுத்துவதற்கு உகந்த சூழல் உருவாகும் காலம் எல்லையினுள் தேசிய மக்கள் சக்திக்கு தமது வேலைத் திட்ட பகுதிகளை மேற்கொள்வதற்கு உரிமை உண்டு என்று எதிர்பார்க்கின்றோம். ஆந்த கொள்கைகளுக்கு ஏற்ப தேசிய அரசியலில் உள்ள அதிகளவிலான பிரச்சினைகள் எங்கள் பிரதேச சபை மீது சாட்டிக்கொள்ளாமல் இதுவரை இந்த பிரதேச சபையானது செயல்பட்டு வந்துள்ளது. தேசிய ரீதியிலான அரசியல் விடயங்கள் அதிக அளவுகளில் இங்கு கதைக்கப்படுவது அல்லது விவாதிப்பது இல்லை. அதற்கு காரணம் பிரதேச சபை என்பது தேசிய அரசியல் காரணங்கள் மீது தொங்கிக்கொண்டு செயல்படுத் நிலையம் ஒன்று அல்ல என்றும் இதன் நோக்கம் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் விசேடமாக பொது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் ஆகும். பிரதேச சபை என்ற ரீதியில் வழங்கப்படும் பொறுப்புக்கள் ஆன பிரதேச சபை மூலம் தற்போது இருக்கும் பொது மக்களுக்கு ஆற்றப்படும்

சேவைகள் அதே நிலையில் நடைமுறைப்படுத்தி செல்வது மற்றும் அச் சேவைகளின் தரத்தை மேம்படுத்தி நடாத்திச் செல்வதற்காக இங்கே கூடியிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் என்ற ரீதியில் நிர்மாணிப்புத்திறன் மற்றும் தரம் என்பனவற்றில் அபிவிருத்திகள் மேற்கொள்வது இச்சபையின் நோக்கம் ஆகும். எங்கள் நோக்கம் வளமபன நாடு அழகான வாழ்க்கை என்ற நிலை மீது அந்த நோக்கங்களை நோக்கி பயணம் செய்வதற்காக சமூக, பொருளாதார, சூழல், அரசியல் காரணங்கள் போன்றவற்றை முறைப்படுத்தல் தொடர்பாக இந்த கௌரவ சபையில் நாங்கள் எல்லோரும் இதுவரை சமாதானமாக செயல்பட்டு வந்து உள்ளோம். இதற்காக பிரதேச சபை தலைவர் என்ற ரீதியில் நான் எனது மரியாதையை கௌரவ உப தலைவரின் தலைமையின் கீழ் இந்த கௌரவ சபைக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அதுபோல் எங்கள் நோக்கங்களான சுகாதார சேவைகள், பௌதீக திட்டங்கள், சாலைவழிகள், காணி கட்டிடங்கள், மக்கள் பயன்பாட்டு சேவைகள், நலன்புரி சேவைகள் போன்றன மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் ஆற்றப்பட்டன ஆனால் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இருப்பதால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மனித வளங்களை இணைத்துக் கொண்டிருக்க முடிந்திருக்கும். அதன் அடிப்படையில் எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் அழகான நகரம் உருவாக்குதல், சாலைவழிகளை அபிவிருத்தி செய்தல், மக்கள் பயன்பாட்டு சேவைகள், நலன்புரி சேவைகள் விருத்தி செய்தல் போன்ற காரணங்களுக்காக வருங்காலத்தில் செயல்கள் ஆற்றுவதற்கு எதிர்பார்க்கின்றேன்.

அதன் அடிப்படையில், 2026 ஆம் ஆண்டு வரவ செலவு திட்ட வரைபின் சாராம்சத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் 2026 ஆம் ஆண்டிற்கான உருவாக்கப்படும் வருமான நிலை ரூ. 37,351,606.00 ஆகவும், வேறு நீதிமன்ற தண்டப்பணம், முத்திரை கட்டணங்கள், சம்பள மீள்நிரப்புக்கள், சபை உறுப்பினர் கொடுப்பனவுகள் உட்பட வெளி ஆதாரங்கள் மூலம் எங்கள் வருமான நிலை ரூ. 109,136,956.00 ஆக மதிப்பிடப்பட்டு உள்ளது அத்துடன், மொத்தமாக 2026 ஆம் ஆண்டிற்கான வருமான உருவாக்கம் ரூ. 146,488,562.00 ஆக மதிப்பிடப்படுவதுடன், மூலதன பெருகைகள் மூலம் ரூ.57,500,000.00 தொகையும் தற்போது எதிர்பார்க்கப்பட்டு உள்ளது, அதன் அடிப்படையில் மீண்டுவரும் செலவுகள் ரூ. 136,485,434.00 ஆகவும் மூலதன செலவுகள் ரூ. 67,500,000.00 ஆகவும் மதிப்பிடப்பட்டு உள்ளன.

இந்த வருடத்தில் சில விடயங்கள் செயல்படுத்த முடியாமல் போனதால் அந்த விடயங்களுக்கு உரிய ஒதுக்கப்பட்ட நிதி மீண்டும் குறைநிரப்பு மதிப்பீடு ஒன்று தயாரித்து ரூ. 70 இலட்சம் தெகை இந்த வருடத்தினுள் செலவு செய்வதற்கு உள்ளது. அந்த நிதியில் ஆகக் குறைந்தது ரூ. இரண்டு இலட்சம் கௌரவ பிரதேச சபை உறுப்பினர்களின் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஈடுபடுத்த உள்ளன. இந்த நிதியானது சேருவது இந்த வருடத்தில் செலவு செய்யப்படாத நிதிக்கு அதனால் இன்றிலிருந்து உங்களுக்கு இது ஒதுக்கப்படுகிறது. முன்வைத்து இருக்கும் அபிவிருத்தி திட்டங்கள் விரைவாக மதிப்பீடுகள் செய்து அவற்றுக்கான பில்கள் இந்த வருடத்தின் இறுதிக்கு முன் முன்வைக்குமாறு கௌரவ சபையிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமிய அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்த வருடத்தில் ஓரளவு நிதி ஒதுக்கப்பட்டு இருந்த போதிலும், 2026 ஆம் ஆண்டு வரவ செலவு திட்டத்தில் கிராமிய வீதி அபிவிருத்தி திட்டங்களுக்கு பிரதேச சபை நிதியத்திலிருந்து 23 இலட்சம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இதுபோன்ற ஒரு நிதி ஒதுக்கப்பட்டது, சம்பள மீள்நிரப்பு தொகையில் 20% பிரதேச சபையினால் பொறுப்பேற்கவேண்டி உள்ளதால் ஆகும். தற்போது சம்பளம் வழங்குவதற்காக 08% பிரதேச சபை நிதியத்தினால் செலுத்தப்படுகிறது. அதன் அடிப்படையில் சம்பளத்திற்காக பிரதேச சபையினால் 28% செலுத்தப்படுகிறது. 2026 ஆம் ஆண்டின் சம்பள மீள்நிரப்பு தொகையில் 20% பிரதேச சபையினால் செலுத்த நேரிடும். 05 வருடங்கள் ஆகும்போது இந்த நிறுவனத்திற்கு அரசினால் எவ்வித நிதியும் வழங்கப்பட மாட்டாது என்றும், சுய உருவாக்கல் நிறுவனம் ஒன்றாக ஆகுவதற்கு உள்ளது. ஆனால் 04 கோடிகள் தொகையை மாகாண சபையினாலும் மற்றும் மத்திய அரசிடம் இருந்தும் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு உள்ளது. 2026 ஆம் ஆண்டில் நாங்கள் கிராமிய அபிவிருத்தி பிரேரணைகளுக்காக ரூ. 42,300,000.00 தொகை ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த தொகை சமமாக அனைத்து பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் ஒதுக்கப்படும்.

அதன் அடிப்படையில் 2026 ஆம் ஆண்டிற்கான மொத்த மூலதனச் செலவு ரூ. 67,500,000.00 தொகையாக மதிப்பிடப்பட்டு உள்ளது.

500 வீதி மின் விளக்குகள் பிரதேச சபையின் ஏகமனதான முடிவின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அவ் 500 வீதி மின் விளக்குகள் தொகுதி வாரியாக சபை உறுப்பினர்களிடையே பகிர்ந்து அளிக்கப்பட்டன. ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவில் 10 வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு உள்ளன. பிரதான வீதிகளுக்கு 130 வீதி மின் விளக்குகள் ஒதுக்கப்பட்டு உள்ளதுடன் 370 வினியோகிக்கப்பட்டு உள்ளன, கௌரவ பிரதேச சபை உறுப்பினர்களின் தொகுதிகளில் அவ் வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு உள்ளன. மேலும் 250 வீதி மின் விளக்குகள் கொள்வனவு செய்வதற்கு உள்ளன.

விசேடமாக இந்த குறுகிய காலத்தினுள் பிரதேச சபையை நடாத்திச் செல்வதற்கு கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன மற்றும் கௌரவ பிரதேச சபை எதிர்கட்சித் தலைவர் திரு. ஏ.டப். சோமரத்ன, பிரதேச சபையின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தேர்தல் தொகுதியின் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுனில் இராஜபக்ச அவர்களுக்கும் இந்த செயற்பாடுகள் தொடர்பாக உதவிகளை பெற்றுத்தரும் பிரதேச சபையின் செயலாளர் உட்பட ஊழியர்களுக்கும், சுகாதார ஊழியர்களுக்கும், மகா சங்கத்தினருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் வரவு செலவு திட்ட வரைபு தொடர்பாக ஒரு பிரிவு கோரினார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசந்த பிரேமகுமார அவர்கள் வரவு செலவு திட்ட வரைபு தொடர்பாக பிரிவுகள் இல்லாமல் ஒத்தாசை வழங்கி பெல்மதுள்ள பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யுமாறு கோரினார்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள்**

இந்வ வரவ செலவு திட்டத்தை எதிர்பதற்கு நிறைய காரணங்கள் உள்ளன என்றார். விளையாட்டு மைதானம் ஒன்றிற்கு 5 இலட்சம் ஒதிக்கியமைக்கு மகிழ்ச்சி அடைவதாகவும், ஆனால் 20% வெட்டப்படுவதாலும் அது வருங்காலத்தில் 40% ஆக வெட்டப்படுவதாலும் வருமானம் ஈட்டுதல் தொடர்பாக எவ்வித பொறுப்பும் இன்றி வரவு செலவு திட்டம் தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும், வரவு செலவு திட்டத்தின் ஒரு பகுதியை மாத்திரம் விவாதிக்க முடியாது என்றும், இங்கு மாற்றங்கள் செய்ய வேண்டிய இடங்கள் நிறைய உள்ளன என்றும், மேலும் வருமானங்கள் ஈட்டுவதற்கு உள்ள கலி பவுசர் இற்கு எதிர்வரும் வருடத்திற்கு ரூ. 1000.00 மதிப்பிடப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்தார்.

எல்லா நேரத்திலும், சேதனப் பசளை மூலம் பிரதேச சபையை நடாத்திச் செல்வதாக கூறியிருந்தாலும், 2024 ஆம் ஆண்டில் ரூ. 58,140.00 தொகை வருமானமா பெறப்பட்டு இருந்த போதிலும், 2026 ஆம் ஆண்டு ரூ. 60,000.00 இற்கு மட்டுப்படுத்தப்பட்டு உள்ளது. இவை புதிய முறையில் செயல்படவேண்டி உள்ளன. இப்படி செயல்பட தேவை இல்லை என்றால் அப்படி எப்படி பெல்மதுள்ளவை அழகாக்குவது. எங்களுக்கு இரண்டு இலட்சங்கள் தந்த போதிலும் அழகான பெல்மதுள்ளவை உருவாக்க முடியாது என்றும், அழகான பெல்மதுள்ளவிற்கு சேவை செய்வது எங்களின் ஆசை என்றும் தெரிவித்தார்.

மேலும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்திக் குழுவில் இருந்து விலகுவதாக தெரிவித்தார். இதுவரை இந்த கமிட்டிக்கு ஒருமித்த முடிவிற்கு வர முடியாத நிலை காணப்படுவதாக கூறினார். இந்த நடைமுறை மேம்பட வேண்டும். இந்த வரவு செலவு திட்டத்தை தான் எதிர்ப்பதாக தெரிவித்தார்.

**கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள்**

தனது பிரிவிற்கு வீதி மின் விளக்குகள் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக கௌரவ தலைவருக்கு நன்றிகளை தெரிவித்ததுடன் பிரிவில் வீதி மின் விளக்குகள் பொருத்தும் போது வேறு பிரதேச சபை உறுப்பனர்களை அதற்காக சம்பந்தப்படுத்திக்கொள்ள வேண்டாம் என்றும், உத்தியோகத்தர் ஒருவரை சம்பந்தப்படுத்துவது உகந்தது என்று கூறினார். 20% சம்பளம் மீள்நிரப்பு செய்வது நடைபெறும். இந்த தொகைக்கு வருமானம் ஈட்டுவது எப்படி என்று இங்கே தெளிவாக குறிப்பிடப்பட்டு இல்லை என்றும், கௌரவ தலைவர் அவர்கள் பெல்மதுள்ள பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய பாரிய அளவில் முயற்சிகள் செய்கிறார் ஆனால் இவற்றிற்கு பணம் தேடும் முறை ஒன்று குறிப்பிடப்பட்டு இல்லை.

பிரதேச செயலகத்தின் மூலம் வீதிகள் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக பிரதேச சபை தெளிவுபடுத்தப்பட்டு உள்ளதா என்பது வினாவாக உள்ளது. பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது இந்த வீதிகள் தாங்கிக் கொள்ள முடியாத அளவுகளில் வாகனங்கள் மூலம் கட்டுமானப் பொருட்கள் போக்குவரத்து செய்தல் காரணமான தர்மரக்பித்த வீதியில் அணை ஒன்று உடைந்து உள்ளது என்றும், அது பற்றி விசேடமாக அவதானம் செலுத்தி உள்ளதுடன், பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது பிரதேச சபைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும், 40% சம்பளம் மீள்நிரப்பு செய்வதற்கு எவ்வாறு பணம் ஈட்டுவது என்று இங்கே குறிபிபட்டப்பட்டு இல்லை என்று தெரிவித்தார்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்கள்**

நாங்கள் பிரதேச சபைக்கு வந்தது செலவுகளை குறைத்து ஊருக்கு சேவை செய்வதற்கு என்றும், இந்த வரவு செலவு திட்டத்திற்கு எதிர்பு தெரிவிப்பதற்கு காரணங்களாக குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும், வருமானம் ஈட்டுவதற்கு எதிர்பார்த்தாலும் எப்படி வருமானங்களை ஈட்டுவது என்பது பற்றி குறிப்பிடப்பட்டு இல்லை என்றும், பெல்மதுள்ள பிரதேச சபையினுள் வருமானம் ஈட்டுவதற்கு உகந்த இடங்களாக நீர்வீழ்ச்சிகளை குறிப்பிட முடியும் என்றும், கிரிந்தி எல்ல, இரஜனாவ எல்ல போன்றவற்றிற்கு அதிக அளவில் பணம் செலவு செய்யப்பட்டு உள்ளது என்றும், கிரிந்தி எல்ல, இரஜனாவ எல்ல போன்றவற்றின் 2024 ஆம் ஆண்டு உண்மை வருமானம் ரூ. 98,750.00 உம் 2025 ஆம் ஆண்டு வருமானம் ரூ. 1000.00 உம், 2026 ஆம் ஆண்டில் ரூ. 500,000.00 வரை வருமானத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்றும், இந்த வருமானத்தை எப்படி அதிகரிப்பது என்று குறிப்பிடப்பட்டு இல்லை என்று கூறினார்.

அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூ. 200,000.00 பெற்றுத் தருவது தொடர்பாக நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன், குப்பை சேகரிக்கும் திறக்டர் இயந்திரத்தை மாரபன பிரதேசத்திற்கு அனுப்புமாறு பிரேரனை ஒன்று கொண்டுவந்த போதிலும் அது இன்னும் செயல்படுத்தப்படவில்லை. உடைந்து காணப்படும் மாரபன பாலத்தை திருத்தி தருமாறு கோரப்பட்ட போதிலும் அந்த தொகுதி உறுப்பினருக்கு ரூ. 200,000.00 போதாது இந்த பாலத்தை திருத்துவதற்கு. இது ஒரு அத்தியவசிய விடயம் ஆகும். இவற்றை ஆராய்ந்து பார்த்து செயல்படுத்துதல்கள் நடைபெறவில்லை. அத்தியவசிய விடயங்களை தேவையான நேரத்தில் ஆற்ற வேண்டும்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள்**

சேதனப் பசளையின் தரம் குறைவான நிலையில் காணப்படுவதாகவும் இந்நிலை இன்று நேற்று ஏற்பட்டது இல்லை என்றும், இந்த சேதனப் பசளை உற்பத்தியின் போது தரக்கட்டுப்பாடுகள் இல்லாமல் செயல்பட்டு இருந்ததால் என்றும், இந்த சேதனப் பசளை உற்பத்தியின் போது முறையான செயல்முறை ஒன்று இருத்தல் வேண்டும் என்றும், தற்போது கமநல ஆலோசகர் ஒருவரின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு கரபின்ச கமநல நிலையத்திற்கு மாதிரிகளை அனுப்புவதற்கும் அப்படி இல்லை என்றால் கன்னோருவ கமநல நிலையத்திற்கு மாதிரிகளை அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளது என்றும், குப்பை முகாமை மற்றும் பசளைகள் தொடர்பாக உரிய செயல்முறை ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும் என்று தெரிவித்தார்.

வரவ செலவு திட்டத்தில் குறைபாடுகள் உள்ள இடங்களை நிவர்த்தி செய்வதற்கு கௌரவ பொது சபையை செயற்பாட்டு குழுவாக நியமிப்பது உகந்தது என்ற கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களின் பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது. (மு.ப. 11.15)

இந்த சந்தர்ப்பத்தில் வரவு செலவு திட்டம் தொடர்பான விடய உத்தியோகத்தர் சபைக்கு வரவழைக்கப்பட்டார்.

501-1, 6-25ii, 102-1 I , 1-63 , பிடியாணை தண்டப்பணம் என்ற விடயத்தில் உள்ள சிக்காலன இடங்களை விவாதித்து சிக்கல்கள் நிவர்த்தி செய்துகொள்ளப்பட்டன.

செயற்பாட்டுக் குழுவை கௌரவ பொது சபையாக நியமிப்பது உகந்தது என்ற கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களின் பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது. (மு.ப. 11.40)

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்கள்**

இந்த வரவு செலவுத் திட்ட வரைபிற்கான விவாதத்தில் கௌரவ தலைவர் முன்வைத்த கருத்துக்களுக்கு இணங்க முடியாத நிலை உள்ளது என்றும், முன்னர் முன்வைத்த கடின பிங்கமவுடன் தொடர்புடைய வீதிகளுக்கு வீதி மின் விளக்குகள் பொருத்தி தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை இது நடைமுறைபடுத்தப்படவில்லை என்றும் வருங்காலத்தில் நடாத்தப்பட இருக்கும் சுமன சமன் தேவ சிலை கொண்டுசெல்லும் பெரஹெரவுடன் தொடர்புடைய வீதிகளில் வீதி மின் விளக்குகள் பொருத்தி தருமாறு கோரிக்கை விடப்பட்டது.

பெல்மதுள்ள பிரதேச சபையின் தகனசாலையின் செயற்பாடுகளில் சிக்கல் நிலைமைகள் காணப்படுவதால் இந்த இடத்திற்கு தகுதியான உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதன் மூலம் ஏற்படும் முறைகேடுகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் இது தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கோரினார்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப்ளிவ். சோமரத்ன அவர்கள்**

ஆளும் கட்சி எதிர் கட்சி பேதங்கள் இன்றி அனைத்து விடயங்களுக்கும் ஆதரவு வழங்கியதாகவும், வீதி மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் கலந்துரையாடி இந்த வீதி மின் விளக்குகளை பொருத்துவதற்கு முன்னுரிமை வழங்கவேண்டிய இடங்களுக்கு முன்னுரிமை வழங்காமல் தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டது தெரிய வந்தது. இந்த வரவு செலவு திட்ட வரைபில் வருமானங்கள் ஈட்டுதல் தொடர்பில் குறைந்த அளவில் முன்னுரிமை வழங்கப்பட்டு உள்ளது என்றும், இதை விட சாதாரணமான உகந்த வரைபு ஒன்றை முன்வைக்க முடியுமாக இருந்தது என்பதால் இந்த வரவு செலவு திட்ட வரைபை எதிர்க்க நேரிடுகிறது என்பதனை தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட வரைபு தொடர்பாக பிரிவு ஒன்று வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் ஆமோதித்தார்.

பெல்மதுள்ள பிரதேச சபையின் செயலாளர் ஆர்.கே. கபில ஜகத் குணதிலக அவர்களினால் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது அத்துடன் 2026 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டம் தொடர்பில் கீழ் குறிப்பிட்டுள்ள விதத்தில் கௌரவ உறுப்பினர்கள் தமது வாக்கை அளித்துள்ளனர்.

**2026 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த கௌரவ உறுப்பினர்கள்**

1. கௌரவ பிரதேச சபை தலைவர் - திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற
2. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
3. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ.ஏ.கே. சுமேத லக்மால்
4. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டப்ளிவ். நிர்மிக தீபால் அபேவர்தன
5. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
6. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
7. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
8. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. இராஜேந்திரன் திசோக்
9. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஜீ. இந்திக்க குமார
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. மயூரி சத்துரிக்கா பரணமான்ன
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.பீ. ஜகத் சேனாரத்தின
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த

**2026 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்த கௌரவ உறுப்பினர்கள்**

1. கௌரவ பிரதேச சபை உப தலைவர் - திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன
2. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
3. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
4. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
5. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
6. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர
7. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
8. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
9. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மொஹான் மஞ்சுல
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். இந்திக்க உதய குமார குணவர்தன
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். ஜெஹன் மோஹன்

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. சச்சினி செவ்வந்தி அன்றைய தினம் பிரதேச சபைக்கு வருகை தந்திருக்கவில்லை.

அதன் அடிப்படையில் ஆதரவாக 18 வாக்குகள் எதிராக 18 வாக்குகள் என்று சமனானதால் கௌரவ பிரதேச சபை தலைவரின் தீர்மான வாக்கு கிடைக்கப்பெற்றது. அவர் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தார்.

**முடிவுகள் இலக்கம் 04**

2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவ திட்ட வரைபு தொடர்பில் சபையின் இணக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக 18 வாக்குகள் எதிராக 18 வாக்குகள் என்று சமனானதால் கௌரவ பிரதேச சபை தலைவரின் தீர்மான வாக்கின் மூலம் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

கௌரவ தலைவர் அவர்களினால் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட செய்தி மற்றும் கொள்கை பிரகடனம் என்பன சபையில் நிறைவேற்றப்பட்டன.

05. குப்பை முகாமை தொடர்பாக தொழிலாளர் கொள்வனவு செய்தல் அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட திரு. டப். சுமித், திரு. ஜே.என். கயான் லக்மிண, திரு. ஆர். உதயகுமார், ஏ. உதயகுமார் ஆகியோரின் தொழில் ஒப்பந்த காலத்தை 03 மாதங்களுக்கு நீடிப்பதற்கான அனுமதியை பெறுவதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 05**

அதன் அடிப்படையில், கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்களின் ஒப்பந்த காலம் 03 மாதங்களுக்கு நீடிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

| தொ.இல | பெயர் | பதவி | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 01 | திரு. டப். சுமித் | சுகாதார தொழிலாளி | 2025.11.09 – 2026.02.09 |
| 02 | திரு. ஜே.என். கயான் லக்மிண | சுகாதார தொழிலாளி | 2025.11.08 – 2026.02.08 |
| 03 | திரு. ஆர். உதயகுமார் | சுகாதார தொழிலாளி | 2025.11.09 – 2026.02.09 |
| 04 | ஏ. உதயகுமார் | சுகாதார தொழிலாளி | 2025.11.18 – 2026.02.18 |

06. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வார சந்தை 2026 ஆம் ஆண்டிக்காக டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

2026 ஆம் ஆண்டிற்கு வார சந்தையை டென்டர் விடுவது உகந்தது என்றும், அதன் மூலம் தற்போது பெறும் வருமானத்தை விட அதிகமான வருமானத்தை ஈட்ட முடியும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

இந்த கால எல்லையினுள் வார சந்தை பற்றிய கணிப்பீடு ஒன்று செய்யப்பட்டதாகவும், அப்போது இங்கே முறை இல்லாமல் முறைகேடுகள் நடைபெறுவதாகவும், பிரதேச சபைக்கு கிடைக்கவேண்டிய வருமானம் கிடைக்காமல் இருப்பதாகவும், ஆராய்ந்து பார்க்கும் போது தற்போது கிடைக்கும் வருமானத்தை விட அதிகமான வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் என்றும், வார சந்தையை முறையாக அபிவிருத்தி செய்து ஒரு வருடத்திற்கு பிரதேச சபையினால் வார சந்தையை நடாத்திப் பார்ப்பது உகந்தது என்றும், இதன் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு அடுத்த படிக்கு செல்வது உகந்தது என்றும், மேலும் வார சந்தை வளாகத்தில் 142 கடை அறைகள் (ரூ. 250.00 அறவிடப்படும்) உள்ளன என்றும் இங்கே நிரந்தர உரிமை கிடைக்கப்பெற்றுள்ளது 124 கடை அறைகளுக்கு மட்டுமே. 1 ஆம் இலக்க கடை அறை தவிர்ந்து 7 ஆம் இலக்க கடை அறை வரை உள்ள கடை அறைகளில் வியாபார நடவடிக்கைகள் மேந்கொள்ளப்படாமல் உள்ளன. இந்த கடை அறைகளில் வேறு கடை அறை உரிமையாளர்கள் தமது பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்து உள்ளனர் என்றும் இக் கடைகளில் இருந்து எவ்வித கட்டணங்களும் அறவிடப்படாமல் உள்ளது. கட்டணம் செலுத்தாமல் பயன்படுத்தும் கடை இலக்கங்கள் 07,13,12,130 என்பவற்றை குறிப்பிட முடியும். நிரந்தரம் அற்ற வியாபாரிகளின் எண்ணிக்கை 15 ஆகும். வார சந்தை காவலாளியாக கடமை புரியும் திரு. தர்சன என்பவருக்கு கடை அறைகள் 05 (கடை அறை இலக்கம் 83,136,137,140,141) உள்ளதுடன் அது எவ்வாறு என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும், இந்த வார சநடதை வளாகத்திற்கு வெளியில் உள்ள கடை அறையை முறையாக்க வேண்டும் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்கள் தெரிவித்தார்.

வார சந்தையை டென்டர் விடுவது உகந்தது உன்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் பி.ப. 12.15 இற்கு சபையில் இருந்து வெளியேறினார்.

**முடிவுகள் இலக்கம் 06**

2026 ஆம் ஆண்டு தொடர்பில் வார சந்தையை பிரதேச சபை நடாத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

07. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான மதிப்பீட்டு வரி இலக்கம் 11/1 கடை அறைகள் - 02 முறையான வழிமுறை ஒன்றிற்கு ஏற்ப 2026 ஆம் ஆண்டிற்கு டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 07**

2026 ஆம் ஆண்டிற்கு மதிப்பீட்டு வரி இலக்கம் 11/1 கடை அறைகள் - 02 முறையான வழிமுறை ஒன்றிற்கு ஏற்ப டென்டர் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்கள் பி.ப. 12.30 இற்கு சபையில் இருந்து வெளியேறினார்.

08. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வார சந்தை வாகன தரிப்பிடத்தை 2026 ஆம் ஆண்டிற்கு டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

வார சந்தை வாகன தரிப்பிடத்தை டென்டர் விடுவதை எதிர்ப்பதாகவும், அதற்கு காரணம் இந்த வாகன தரிப்பிடம் முறையான வழிமுறை ஒன்றை தயாரித்து அதன் மூலம் அதிகளவிலான வருமானத்தை ஈட்ட முடியும் என்பதால் என்றும், வாகன தரிப்பிட வளாகத்தை அபிவிருத்தி செய்து அறவிடப்படும் பணத்தொகையை அதிகரிப்பது உகந்தது என்றும், மாணிக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்படும் மரக் குற்றிகளை இந்த இடத்தில் இருந்து அகற்றி இந்த இடத்திலும் வாகனங்கள் நிறுத்திவைக்கக்கூடிய வகையில் உகந்த விதத்தில் தயார் செய்தல் வேண்டும் என்றும், மேலும் வாகன தரிப்பிட வளாகத்தில் டிக்கட் வினியோகிக்கும் ஊழியருக்கு இருப்பதற்கு உகந்த இடம் ஒன்று அமைத்துக் கொடுத்தல் வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியானி வீரசேகர அவர்கள் தெரிவித்தார்.

ஒரேயடியாக வியாபாரங்ளை அகற்றுவது உகந்தது அல்ல என்றும் அப்படி அகற்றுவதானால் சலுகைக் காலம் ஒன்று வழங்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 08**

2026 ஆம் ஆண்டு தொடர்பில் வார சந்தை வாகன தரிப்பிடத்தை பிரதேச சபை நடாத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

09. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வார சந்தைக்கு அருகில் உள்ள மலசலகூடத்தை 2026 ஆம் ஆண்டிற்கு டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 09**

வார சந்தைக்கு அருகில் உள்ள மலசலகூடத்தை 2026 ஆம் ஆண்டிற்கு முறையான வழிமுறை ஒன்றின் கீழ் டென்டர் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

10. கிரிந்தி எல்ல பிரவேச வீதி மற்றும் பார்வையிடும் இடத்தை 2026 ஆம் ஆண்டிற்கு டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 10**

கிரிந்தி எல்ல பிரவேச வீதி மற்றும் பார்வையிடும் இடத்தை திரு. வயி. சுமன் பிரியதர்சனவிற்கு 2026 ஆம் ஆண்டிற்கு குத்தகை காலத்தை நீடித்து வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

11. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான இலக்கம் 14 மீன் கடையை 2026 ஆம் ஆண்டிற்கு டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 11**

இலக்கம் 14 மீன் கடையை 2026 ஆம் ஆண்டிற்கு முறையான வழிமுறை ஒன்றின் கீழ் டென்டர் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

12. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான இலக்கம் 13 கடை அறையை 2026 ஆம் ஆண்டிற்கு டென்டர் விடுவதற்கு உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

இலக்கம் 12 கடை அறையை 2026 ஆம் ஆண்டிற்கு முறையான வழிமுறை ஒன்றின் கீழ் டென்டர் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

13. லெல்லொபிட்டிய ''ருக்மலே கும்புற'' என்ற காணியை விளையாட்டு மைதானம் ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்கு அக் காணியை பிரதேச சபை கையகப்படுத்துதல் உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

லெல்லொபிட்டிய ''ருக்மலே கும்புற'' என்ற காணியை விளையாட்டு மைதானம் ஒன்றாக அபிவிருத்தி செய்வதற்கு அக் காணியை பிரதேச சபை கையகப்படுத்துதல் உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

பெல்மதுள்ள பிரதேச சபையின் ஊழியர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்காக உந்துதல் பயிற்சி நிதழ்ச்சி திட்டத்திற்காக (Academy of adventure (pvt) ltd. Kumbalgama, Belihul-Oya) 2025.12.14 ஆம் திகதி நடாத்துவதற்கும், முன்வைக்கப்பட்டு உள்ள ரூ. 301,500.00 பெருமதியான செலவு மதிப்பீட்டானது சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அத்துடன் கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக முன்வைத்தலானது சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

15. பிரதேச சபையின் அறிவித்தல் பதாகைகள், வேறு தற்காலிக நிர்மாணங்கள் மற்றும் அலங்காரங்களை நடாத்திச் செல்வது தொடர்பான துணை விதி வரைபிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 15**

பிரதேச சபையின் அறிவித்தல் பதாகைகள், வேறு தற்காலிக நிர்மாணங்கள் மற்றும் அலங்காரங்களை நடாத்திச் செல்வது தொடர்பான துணை விதி வரைபு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

16. பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரசார அறிவித்தல் பதாகைகள் காட்சிப்படுத்தல்கள் முறைப்படுத்தல் தொடர்பான துணை விதி வரைபிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 16**

பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரசார அறிவித்தல் பதாகைகள் காட்சிப்படுத்தல்கள் முறைப்படுத்தல் தொடர்பான துணை விதி வரைபு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

17. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் காணப்படும் 38 முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்கள் தொடர்பாக களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர் இந்த முச்சக்கரவண்டி நிறுத்தும் இடங்கள் அனைத்தும் பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளில் இல்லாததன் காரணத்தினால், கட்டணங்கள் அறவிட்டுக்கொள்வது தொடர்பாக சட்டரீதியான இயலுமை இல்லாததன் காரணத்தினால் நிலுவை பணத் தொகையை கழித்து விடுவது அல்லது முச்சக்கரவண்டி சங்க ஆவணத்தில் இருந்து நீக்குதல் தொடர்பாக உகந்த முடிவு ஒன்றை எடுக்குமாறு கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 17**

பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் காணப்படும் 37 முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடங்களில் இருந்து கட்டணங்கள் அறவிடுதல் தொடர்பாக ஆவணப்படுத்தப்பட்டு உள்ள ஆனால் சட்ட ரீதியாக வசூலித்துக்கொள்ள முடியாத ரூ. 3,834,750.00 தொகை முச்சக்கரவண்டிகள் கட்டணங்கள் ஆவணங்களில் இருந்து நீக்குவதற்கும், ஆவணங்களில் பில் செய்தல்களை நிறுத்துவது சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது, அத்துடன் கௌரவ ஆளுனர் அவர்களின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக முன்வைத்தலானது சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

18. ரூ. 7,014,579.00 தொகை குறைநிரப்பு மதிப்பீட்டிற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

அதன் அடிப்படையில்,

| விடய தலைப்பு | தொகை (ரூ) |
|---|---|
| 109-2 சீ.சீ.ரீ.வீ. கெமரா கொள்வனவு செய்வதற்கு | 400,000.00 |
| 204-1 இயந்திர உபகரணங்கள் வாகன பழுதுபார்த்தல்கள் | 300,000.00 |
| 304-1 இயந்திர உபகரணங்கள் வாகன பழுதுபார்த்தல்கள் | 314,579.00 |
| 304-6 அவசர இடர் மற்றும் வேறு | 1,000,000.00 |
| 309-1 கிராமிய வீதிகள் அபிவிருத்தி | 4,000,000.00 |
| 604-3 வீதி மின் விளக்குகள் | 1,000,000.00 |
| மொத்தம் | 7,014,579.00 |

ரூ. 7,014,579.00 இற்கான குறைநிரப்பு மதிப்பீடு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

19. 2024 ஆம் ஆண்டு அரச நிர்வாக, உள்ளாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதி அளிக்கப்பட்டுள்ள புதுலென விஹாரை வீதியை அபிவிருத்தி செய்தல் திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் உரிய பில்களுக்கு ஏற்ப பிரதான அமைச்சில் இருந்து மீள்நிரப்பு செய்யப்பட்ட ரூ.1,583,809.12 தொகை திசர சுபசாதக அவமங்கல்யாதார சமிதிய இற்கு தழுவ அனுமதியின் கீழ் செலுத்தப்பட்டது. அந்த கொடுப்பனவிற்கான அனுமதியை பெறுவதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

புதுலென விஹாரை வீதியை அபிவிருத்தி செய்தல் திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் உரிய பில்லுக்கு ஏற்ப பிரதான அமைச்சில் இருந்து மீள்நிரப்பு செய்யப்பட்ட ரூ.1,583,809.12 தொகை திசர சுபசாதக அவமங்கல்யாதார சமிதிய இற்கு செலுத்தப்பட்ட கொடுப்பனவு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

20. பெல்மதுள்ள நகரம், பெல்மதுள்ள கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிரதான வீதிகளில் ஒளிவழங்குவதற்கு 150w கோப்ரா மின் விளக்கு தொகுதிகள் 20 கொள்வனவு செய்வதற்கான அனுமதியை பெறுவதற்காக கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

150w கோப்ரா மின் விளக்கு தொகுதிகள் 20 மற்றும் அவற்றை பொறுத்துவதற்கான ஆதாரத்திற்கான 11/2 அங்குல விட்டமுடைய மற்றும் 135 பாகை சாய்வுள்ள 04 அடிகள் நீளமான GI குழாய், க்லேம்ப் (clamp) மற்றும் நுனி 12 அங்குள

நீளமான கல்வனைஸ் ஆணிகள் (ஒரு வீதி மின் விளக்கிற்கு 02 வீதம்) முறையான வழிமுறை ஒன்றின் மூலம் கொள்வனவு செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**கௌரவ பிரதேச சபை உப தவைலர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்களின் பிரேரணைகள்**

01. செயல்படாமல் இருக்கும் வீதி மின் விளக்குகள் தொடர்பாக நீண்ட காலமாக பேசிய போதிலும் இதுவரை பதில் ஏதும் கிடைக்கவில்லை. தற்போது பௌத்த விஹாரைகளில் கடின பிங்கம் பூசைகள் மற்றும் 2025.10.25 ஆம் திகதி தீபாவளி பண்டிகை நடைபெறும். இதனால் பிரதேச சபை தலைவர் அவதானம் செலுத்தி இயன்றளவு விரைவாக வீதி மின் விளக்குகள் அத்தியவசிய இடங்களில் பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

தற்போது வீதி மின் விளக்குகள் பெருத்தப்பட்டு வருவதால், வருங்காலத்தில் தொகுதிகளில் காணப்படும் செயல்படாத வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்கு வீதி மின் விளக்குகள் பெற்றுக் கொடுப்பது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. 10 ஏக்கர் குறுக்கு வீதியில் 70 அடிகள் வரையிலான பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பொருட்களை பெற்றுத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 22**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய மற்றும் நிதி ஒதுக்கங்களுக்கு ஏற்ப வருங்காலத்தில் 10 ஏக்கர் குறுக்கு வீதியில் 70 அடிகள் வரையிலான பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பொருட்களை பெற்றுக் கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. சம்பள மீள்நிரப்பு தொடர்பாக 20% தொகை பிரதேச சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிடுவதால் பிரதேச சபைகளின் நாளாந்த நடவடிக்கைகளை நடாத்திச் செல்வது முடியாமல் போகும் நிலை ஏற்படுவதால் அவ் 20% தொகை பிரதேச சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு உள்ள வழிமுறைகளை நிறுத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 23**

இந்த பிரச்சினை தொடர்பாக உரிய பங்குதாரர்களை தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. 31 ஏக்கர் பஹல போபிடியவில் உள்ள பிரதேச சபைக்கு உரித்தான காணியை அளந்து தீர்வு செய்வது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 24**

31 ஏக்கர் பஹல போபிடியவில் உள்ள பிரதேச சபைக்கு உரித்தான காணியை அளந்து தீர்வு செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

05. பெல்மதுள்ள வைத்திசாலையின் நோயாளி வண்டி கடந்த சில வாரங்களாக பழுதடைந்து காணப்படுவதாக வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்தனர். இதனால் பெல்மதுள்ள சுற்றியுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் உரிய பிரிவுளை தெளிவுபடுத்தி விரைவாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 25**

பெல்மதுள்ள வைத்திசாலையின் நோயாளி வண்டி பழுதுபார்த்து உள்ளதாக கௌரவ சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்களின் பிரேரணைகள்**

01. 2025.09.26 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு முடிவுகள் இலக்கம் 12 இன் கீழ், ஸ்ரீ லங்கா ரெலிகோம் தனியார் நிறுவனத்தின் பெல்மதுள்ள கிளை நடாத்திச் செல்லும் இடத்திற்கு உரிய நிவ வரி பெற்றுக்கொள்வது உகந்தது என்றும், ரெலிகோம் நிறுவனத்திற்கு பிரவேசிக்கும் இடத்தில் உள்ள பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வடிகாலின் இரண்டு புறங்களிலும் வாங்குகள் இரண்டு வைத்து அபிவிருத்தி செய்வதற்கும், இது தொடர்பாக ரெலிகோம் நிறுவனத்திற்கு தெரியப்படுத்துவது உகந்தது என்றும், அப்படி இல்லை என்றால் பெல்மதுள்ள பிரதேச சபையின் செலவில் இதை அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 26**

ஸ்ரீ லங்கா ரெலிகோம் தனியார் நிறுவனத்தின் பெல்மதுள்ள கிளை நடாத்திச் செல்லும் இடத்திற்கு உரிய நிவ வரி பெற்றுக்கொள்வதற்கு அந் நிறுவனத்துடன் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கும், அதன சட்ட ரீதியான நிலை பற்றி அவதானம் செலுத்துவதற்கும், ரெலிகோம் நிறுவனத்திற்கு பிரவேசிக்கும் இடத்தில் உள்ள பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள

வடிகாலின் இரண்டு புறங்களிலும் வாங்குகள் இரண்டு வைத்து அபிவிருத்தி செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. 2026.09.26 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு முடிவுகள் இலக்கம் 06 இன் கீழ், சுற்றுலா ரீதியில் கவரும் இடங்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கிரிந்தி எல்லவிற்கு சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்துக் கொண்டு இதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் என்பதால் இதற்கு உகந்த வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்துக் கொள்வதற்கு உகந்த முடிவு ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக கௌரவ சபையிடம் முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 27**

இது தொடர்பாக நிபுணர்களின் ஆலோகனைகளை பெற்றுக் கொள்வதற்கும், விரைவாக உகந்த வேலைத்திட்டம் ஒன்றை தயார் செய்து முன்வைப்பதற்கு வருங்காலத்தில் நடவடிக்கைகள் எடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. 2026.09.26 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழு முடிவுகள் இலக்கம் 15 இன் கீழ், பெல்மதுள்ள நகரத்தில் முச்சக்கரவண்டிகள் நிறுத்தி வைப்பதினால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வாக பிக் மீ (Pick me) சேவையை பெல்மதுள்ள நகரத்தரினுள் செயல்படுத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சாந்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 28**

தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் இச் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் இந்த செயலுக்கு தலையிடுவது உகந்தது அல்ல என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. 2025.08.05 ஆம் திகதி மற்றும் 2025.09.22 ஆம் திகதி நடைபெற்ற சூழல் மற்றும் பொது வசதிகள் குழு கூட்டங்களில் கழிவு முகாமை பொறிமுறை தொடர்பாக ஈடுபடுத்தப்பட்டு உள்ள வாகனங்கள் சம்பந்தமாக பிரேரணைகள் முன்வைத்த போதிலும் தொடர்ந்து கழிவு முகாமை பொறிமுறை வினைதிறன் அற்று காணப்படுகின்றது. இந்த நிலையில் இருந்து மீள்வதற்கு உங்கள் அவதானத்தை செலுத்துமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக லியனகே அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இஹல போபிடிய சந்தியில் குப்பை போடுவது தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உபதலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 29**

கழிவு முகாமை பொறிமுறை தொடர்பாக ஈடுபடுத்தப்பட்டு உள்ள வாகனங்கள் பழுதுபார்த்ததன் பின்னர் கழிவு முகாமை பொறிமுறை உரிய விதத்தில் செயல்படுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களின் பிரேரணைகள்**

01. மாரபன மெதவெல, மாரபன தெற்கு, கொடகவெல பஹலவெல தொபகஸ்வெல்பல என்ற மாரபன பிரிவில் மேழே குறிப்பிட்ட பிரதேசங்களில் 30 சுற்றித் திரியும் மாடுகள் இருப்பதுடன் அவை அனைத்து இடங்களிளும் சுற்றி திரிவதனால் வீதி விபத்துக்கள் மற்றும் பயிர் சேதங்கள் ஏற்படுகின்றன். இதற்கு தீர்வொன்றை பெற்றுத்தருமாறு கௌரவ சபையிடம் பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 30**

இந்த விடயம் தொடர்பாக உகந்த பொறிமுறை ஒன்றை தயாரிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. சுற்றித் திரியும் மாடுகளை பராமரிப்பதற்கு மற்றும் பொறுப்பேற்பதற்கு விருப்பமான நபர்கள் இருப்பின் தேவையான சட்ட நிலைமைகளின் கீழ் இந்த மாடுகளை வழங்குவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 31**

இந்த விடயம் தொடர்பாக உகந்த பொறிமுறை ஒன்றை தயாரிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. பனகம பிரதான வீதியில் டேவிட் கந்த அருகில் உள்ள பொது கிணறு இதற்கு முன் பிரதேச சபையினால் கட்டப்பட்டு இருந்த கட்டடம் உடைந்து கிணற்றுக்குள் விழுந்து உள்ளது. ஆதை மீண்டும் புனர்நிர்மாணம் செய்து பொது மக்களுக்கு பெற்றுக்கொடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 32**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய இந்த பொது கிணற்றை புனர்நிர்மாணம் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**v. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்களின் பிரேரணைகள்**

01. எங்கள் பிரதேச சபைக்கு மொழிப் பெயர்ப்பு சம்பந்தமாக mick மற்றும் speaker பெற்றுக்கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 33**

முறையான பொறிமுறை ஒன்றின் மூலம் விலைமனு கோரல்கள் கோரப்பட்டு நிதி நிலமைகளை கருத்தில் கொண்டு கொள்வனவு செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. போதைப்பொருள் (கசிப்பு) பயன்பாட்டை ஒழிப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 34**

இதுபோன்ற போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்கு தற்போது அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதால் இது தொடர்பாக பிரதேச சபை தலையிடுவது உகந்தது அல்ல என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. இலக்கம் 03, கட்டங்கே மேல் பிரிவில் பொது இடங்களில் உள்ள மின்சார கட்பிகளுக்கு பதிலாக கேபல்கள் பயன்படுத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், மின்சார கட்பிகளுக்கு பதிலாக கேபல்கள் பயன்படுத்துவது தற்போது நடைமுறையில் உள்ளது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 35**

மின்சார சபைக்கு முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. கட்டங்கே வீதியில் டிறான்ஸ்போமர் அருகில் இருக்கும் ஓடையை சுத்தம் செய்தல் மற்றும் அந்த ஓடைக்கு வடிகால் குழாய் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 36**

பிரதேச சபை மூலம் இந்த ஓடையை சுத்தம் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களின் பிரேரணைகள்**

01. உடுதுல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் திருமதி. எல்.எச். குணவதியின் வீட்டுத் தோட்டத்திற்காக சேதனப் பசளை, விதை வகைகள் பெற்றுக் கொடுத்து அவருக்கு உதவி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 37**

உடுதுல கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் திருமதி. எல்.எச். குணவதியின் வீட்டுத் தோட்டத்திற்காக சேதனப் பசளை, விதை வகைகள் பெற்றுக் கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**vii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்ன அவர்களின் பிரேரணைகள்**

01. பயிகெதர வத்த ஊடாக இர/ பாதகட பௌத்த வித்தியாலயத்திற்கு உள்ள வீதியை புனர்நிர்மானம் செய்து மருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 38**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. சகடயாவத்த, தேவாலெகம், பாதகட, பெல்மதுள்ள முகவரியில் வசிக்கும் திரு. கே. நந்தன கருணாரத்ன என்பவரின் பழுதடைந்து காணப்படும் வீட்டுக் கூரையை திருத்திக்கொள்வதற்கு தேவையான உதவிகளை வழங்கவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 39**

பிரதேச சபை நிதியில் இருந்து இந்த வருடத்தில் செலவு செய்ய போதியளவில் நிதி ஒதுக்கங்கள் இல்லாததன் காரணத்தினால் உரிய நிறுவனங்களை தெளிவுபடுத்துவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. பாலுகம்பல, உடஹகந்த வீதியில் உள்ள வடிகால் குழாயை திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 40**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**viii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேனர அவர்களின் பிரேரணைகள்**

01. பெரண்டுவ மன்னகேவத்த வீதியில் 30 மீற்றர் அளவு பழுதடைந்து காணப்படும் பகுதியை கொங்கிறீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 41**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. உடதலுவ விளையாட்டு மைதானத்தை பெகோ இயந்திரம் பயன்படுத்தி துப்பறவு செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 42**

பெகோ இயந்திரம் பயன்படுத்தி துப்பறவு செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. புதுலென 10 ஏக்கர் பிரிவிற்கு பிரவேச வீதி ஒன்று இல்லாத 06 வீடுகளுக்கு புதிய வீதி ஒன்று (பெகோ இயந்திரம் பயன்படுத்தி) ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 43**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

04. பிரவேச வீதி ஒன்று இல்லாத கால தோட்ட மேல் பிரிவின் 07 வீடுகளுக்கு புதிய வீதி ஒன்று (பெகோ இயந்திரம் பயன்படுத்தி) ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 44**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ix. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்களின் பிரேரணைகள்**

01. கடந்த நாட்களில் காணப்பட்ட பாதகமான காலநிலை நிலமைகள் காரணமாக எங்கள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சில வீடுகளுக்கு அதாவது பலாங்கொடை வீதி காமரங்கபிட்டிய விலாசத்தில் வசிக்கும் திரு. சுவன் ஹெலஉட என்பவரின் வீடு, பெரண்டுவ 30 ஏக்கர் விலாசத்தலில் வசிக்கும் திரு. யொஹான் சஞ்சய சிறிவர்தன என்பவரின் வீடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டு உள்ளதால் அவ் வீடுகளுக்கு உதவிகளை பெற்றுக்கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 45**

இது தொடர்பாக பிரதேச செயலகத்தின் இடர் முகாமை பிரிவிற்கு முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. கெடேதென்ன கல்உலுவஸ்ச குப்பை மேட்டிற்கு அருகில் வசிக்கும் திரு. இரன்ஜித் சான்த என்பவரை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தி உள்ளதுடன் அந் நபர் தொடர்பாக சாதாரணம் செய்யுமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தஆரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த காணியில் அத்துமிறி 07 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், அவர்களுக்க பிரதேச சபையின் ஊடாக சாதாரணம் செய்வதானால் திரு. இரன்ஜித் சான்த என்பவருக்கும் சாதாரணம் செய்யுமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விகிகிரமனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 46**

இந்த காணியானது பிரதேச சபைக்கு சொந்தமாக காணி என்பதால், அரசுக்கு சொந்தமான காணிகளை தனி நபர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு சட்டரீதியான நிலமைகள் இல்லை என்பதால் இந்த அத்துமீறிய வதிவிடதாரர்களுக்கு சாதாரணம் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**x. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களின் பிரேரணைகள்**

01. வன்னிஆரச்சிகம விளையாட்டு மைதானத்தை பழுதுபார்த்து விளையாடுவதற்கு உகந்த விதத்தில் அமைத்துக்கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 47**

வன்னிஆரச்சிகம விளையாட்டு மைதானத்தை பழுதுபார்த்து விளையாடுவதற்கு உகந்த விதத்தில் அமைத்துக்கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. வள்ளிஆரச்சிகதவில் உள்ள ஔடத பூங்காவை பார்வையிட்டு பிரதேச சபையினபல் நடாத்திச் செல்லும் ஔடத பூங்கா என்ற ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 48**

வள்ளிஆரச்சிகதவில் உள்ள ஔடத பூங்காவை பார்வையிட்டு பிரதேச சபையினபல் நடாத்திச் செல்லும் ஔடத பூங்கா என்ற ரீதியில் அபிவிருத்தி செய்வதது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**xi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களின் பிரேரணைகள்**

01. தலங்கம் வீதியில் இருந்து பிரியும் இஹலவத்த வீதியின் பிரவேசத்தை திருத்துவதற்கு தேவையான பொருட்களை பெற்றுத்தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 49**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. மல்வது ஹேன யாயவில் இருந்து ஹகமுன பொத்தகந்த, எத்ஒய வரையிலான ஊரின் நடுவில் உள்ள வீதிக்கு 09 வடிகால் குழாய்கள் பெற்றுக் கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 50**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

03. தலங்கம வீதியில் இருந்து ஆராயம வரையில் உள்ள வீதிக்கு 04 வடிகால் குழாய்கள் பெற்றுக் கொடுப்பதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 51**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**xii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

01. நாரங்கொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் திலென தரு விளையாட்டு சங்கத்தினால் நடாத்திச் செல்லப்படும் விளையாட்டு மைதானத்திற்கு இரவு நேரங்களில் விளையாடுவதற்கு தேவையான மின் குமிழ்களை பொருத்தித் தருமாறு பிரேரிக்கன்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 52**

அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் உள்ள விளையாடுவதற்காக பயன்படுத்தப்படும் விளையாட்டு மைதானங்களுக்கு தேவையான மின் குமிழ்களை பொருத்துவதற்கு உள்ள இயலுமை பற்றி உரிய நிறுவனங்களில் இருந்து விசாரிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. குட்டாபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள கிரிந்த எல்ல நீர்வீழ்ச்சியின் மேல் பிரவேச வீதி (பிரதான பாலத்திற்கு அருகில்) படிக்கட்டை அபிவிருத்தி செய்து அந்த இடத்தில் விசேடமாக பெண்களுக்கு ஆடைகளை

மாற்றுவதற்கும், அந்த இடத்திற்கு வரும் நபர்களின் தேவைகளுக்கு ஏற்ப சிறிய கடை ஒன்றும், அந்த இடத்தில் டிக்கட் கவுன்டர் ஒன்றும், நீர்வீழ்ச்சிக்கு செல்லும் நபர்களுக்கு டிக்கட் வழங்குவதற்கும் பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 53**

கள ஆய்வு ஒன்றை மேற்கொண்டு பெண்களுக்கு ஆடைகளை மாற்றுவதற்கு இடம் ஒன்றும், அந்த இடத்திற்கு வரும் நபர்களின் தேவைகளுக்கு ஏற்ப சிறிய கடை ஒன்றும், டிக்கட் கவுன்டர் ஒன்றை நிர்மாணிப்பதற்கு தேவையாக இடங்களை தேடுவதற்கும், இதன் சட்டரீதியான நிலை தொடர்பாக ஆராய்ந்து வருங்காலத்தில் இக் காரியங்களை மேற்கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**xiii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். இந்திக உதய குமார குணவர்தன அவர்களின் பிரேரணைகள்**

01. மேல் ஹகமுவ கஜுஹேன வீதியில் 20 அடிகள் கொண்ட பகுதியொன்று தனசேகர முதலாளியின் கடை அருகில் மிகவும் உடைந்து காணப்படுகிறது. இதை கொங்கிறீட் இட்டு செப்பனிட்டு தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 54**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. மேல் ஹகமுவ கஜுஹேன வீதியில் தண்ணீர் பீலி அருகில் மிகவும் உடைந்து காணப்படும் 20 அடிகள் பகுதியை கொங்கிறீட் இட்டு செப்பனிட்டு தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 55**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**xiv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. கே. சுமேத லக்மால் அவர்களின் பிரேரணைகள்**

01. பிரதேச சபைக்கு சொந்தமான வீதிகளை அபிவிருத்தி செய்யும் போது (கொன்கிறீட் அல்லது தார்) வீதியின் இருபுறமும் எல்லைகளை அடையாளம் இடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.ஜீ. சந்திரலால் ஜயரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 56**

இந்த வீதிகள் வர்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் எல்லைகளை அடையாளம் இடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. இரவு 11.00 மணிக்கு பின் அதிக சத்தத்துடன் JCB இயந்திரங்களை இயக்குவதை தடை செய்வதற்கு தெவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.ஜீ. சந்திரலால் ஜயரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 57**

மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு JCB இயந்திரங்களை இயக்குவதால் பாதிப்புக்கு உள்ளாகுத் 03 நபர்களின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் ஒன்றை பிரதேச சபைக்க ஒப்படைக்குமாறும், இது தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு புகார் பதிவதன் மூலம் இந்த விடயத்தை நிவர்த்தி செய்து கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**xv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த அவர்களின் பிரேரணைகள்**

01. கனேகம மிதலன வீதியில் தெனவக ஓடைக்கு குறுக்காக உள்ள பாலத்தில் மரங்கள் விழுந்து உள்ளதால் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 58**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய கனேகம மிதலன வீதியில் தெனவக ஓடைக்கு குறுக்காக உள்ள பாலத்தில் விழுந்து உள்ள மரங்களை அகற்றுவதற்கு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

02. பெல்மதுள்ள சுவஹஸ் மலர் சங்கம் அவர்களுடைய மலர் கண்காட்சியை கனேகம் விஹாரையின் முன்புறம் நடாத்துகின்றனர். அவர்கள் குறிப்பிடும் விதத்தில் அதற்கு பெரும் அளவில் செலவுகள் செய்ய நேரிடுவதால், அதற்கு வார சந்தை அருகில் உள்ள வாகன தரிப்பிடத்தை பெற்றுக் கொடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 59**

அந்த இடத்தில் ஏனைய விடயங்களுக்கு தடங்கல் ஏற்படாத விதத்தில் உரிய கட்டணங்கள் செலுத்தி வாகன தரிப்பிட வளாகத்தை ஒதுக்கிக் கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**xvi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஆர். புவனேஸ்வரி அவர்களின் பிரேரணைகள்**

01. பனாவென்ன பிரிவு 06, கொடகம, பெல்மதுள்ள தோட்ட கோவிலுக்கு அருகில் இருந்து பாடசாலை வரை உள்ள கொற்கிறீட் வீதி உடன் வடிகால் தொகுதியை செப்பனிட்டு தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 60**

தொழிநுட்ப உத்தியோகத்தர் மூலம் களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய பிரதேச சபையின் நிதி நிலமைகளுக்கு ஏற்ப இந்த அபிவிருத்தி பணிகளை செய்வதற்கும், அதுபொல் செய்ய முடியாத அபிவிருத்தி பணிகளை உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**அவசர பிரேரணைகள் இலக்கம் 01**

**கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள்**

01. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான கழிவு மீழ்சுழற்சி நிலையத்தில், பிரதேச சரை பிரதான அலுவலகத்தில், தகன சாலையில் CCTV கெமரா தொகுதியொன்றை பொருத்துவதுதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவு**

குறைநிரப்பு மதிப்பீட்டு அறிக்கையில் CCTV கெமரா தொகுதியொன்றை பொருத்துவதுதற்கு முற்பணங்கள் ஒதுக்கப்பட்டு உள்ளதால், கழிவு மீழ்சுழற்சி நிலையத்தில், பிரதேச சரை பிரதான அலுவலகத்தில், தகன சாலையில் CCTV கெமரா தொகுதியொன்றை பொருத்துவது உகந்தது என்று முடிவு செய்யப்பட்டது.

**அவசர பிரேரணைகள் இலக்கம் 02**

02. பெல்மதுள்ள பிரதேச சபை பொது மக்களுக்கான வசதிகளை வழங்கும் போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வாக இலக்கம் 23, ஊரதெனிய, சன்னஸ்கம, லெல்லொபிட்டிய முகவரியில் வசிக்கும் திரு. யூ. பிரேமரத்ன அவர்களை கள தொழிலாளியாக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்பு செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவு**

கள தொழிலாளி வெற்றிடங்கள் 05 இற்கு நிதி ஒதுக்கங்கள் காணப்படுவதால் தகனசாலைக்கு கள தொழிலாளி ஒருவரை ஆட்சேர்பு செய்வது உகந்தது என்று முடிவு செய்யப்பட்டது.

**அவசர பிரேரணைகள் இலக்கம் 03**

**கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. டப்ளிவ். வசன்த குமாரசிறி அவர்கள்**

கெடேதென்ன பொரால வரையிலான வீதியில் ஹொரகஸ்ஓவிட ஊரில் 75 மீற்றர் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு ரூ. 20 இலட்சம் கிடைக்கப்பெற்று உள்ளது ஆனால் இந்த இடத்தல் (வீதியின் நடுவில்) மாணிக்கக் கல் அகழ்வு தோண்டி இருப்பதாலும் இன்னும் சில இடங்களில் மாணிக்கக் கல் மண் (இல்லம) எஞ்சி இருப்பதால் இந்த இடத்தை மாணிக்கக் கல் அகழ்விற்கு ஏலத்தில் விட்டு அகழ்விற்கு பின்னர் மீண்டும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கும், ரூ. 20 இலட்சம் தொகையை எங்கள் பிரிவில் பட்டியதெனிய ஊருக்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்கித் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக குமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவு**

கெடேதென்ன பொரால வரையிலான வீதியில் ஹொரகஸ்ஓவிட ஊரில் 75 மீற்றர் பகுதியை முழுமையாக தோண்டி மண்ணை அகற்றி அபிவிருத்தி செய்யவேண்டிய வீதி ஒன்று என்று ஊர் பொதுமக்கள் மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்துள்ளனர். இந்த வீதியானது மாணிக்கக் கல் மண் (இல்லம) உள்ள வீதி என்பதால் இரத்திணக்கல் அதிகாரசபை ஊடாக மாணிக்கக் கல் அகழ்வதற்கு ஏலம் விட்டு பெறப்படும் பணத்தைக் கொண்டு இந்த வீதியை அபிவிருத்தி செய்வதற்கும், இதற்கு ஒதுக்கியுள்ள நிதியானது பற்றாக்குறை ஏற்பட்டால் அதற்காக நிதி முற்பணங்கள் ஒதுக்கி வீதியை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் ரூ. 20 இலட்சம் தொகையை எங்கள் பிரிவில் பட்டியதெனிய ஊருக்கு செல்லும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கு ஒதுக்குவது உகந்தது என்று முடிவு செய்யப்பட்டது.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள்**

2025.09.26 ஆம் திகதி நடைபெற்ற வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவின் கூட்ட அறிக்கை, 2025.10.13 ஆம் திகதி நடைபெற்ற சூழல் மற்றும் பொது வசதிகள் குழுவின் கூட்ட அறிக்கை, 2025.11.17 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் குழுவிக் கூட்ட அறிக்கைகள் சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி குழுவின் தலைவர் பதவியை இரஜனாமா செய்தார்.

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2025.09.01 ஆம் திகதியில் இருந்து 2025.09.30 ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக்க அவர்கள் பி.ப. 01.30 இற்கு சபையில் இருந்து வெளியேறினார்.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்

**கௌரவ பிரதேச சபை உப தவைலர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன அவர்கள்**

பழ வியாபாரம் செய்தல் தொடர்பாக நிரந்தர கடை உரிமையாளர்கள் எதிர்பு தெரிவிக்கின்றனர் என்றும், கனேகம சந்தியில் வாகன தட்டு ஒன்றை வைத்துக்கொண்டு குறைந்த விலைக்கு பழங்கள் விற்பனை செய்து வருவதன் முலம் பெல்மதுள்ள பிரதேச மக்களுக்கு நிவாரணம் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும், நிரந்தர கடை உரிமையாளர்கள் மின்சார கட்டணம், கடை கூலி செலுத்தி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு அசாதாரணம் ஏற்படுகின்றது என்றும், இவர்களை அகற்றாமல் ஏனைய வியாபாரிகளுடன் கலந்தாலோசித்து ஒரே விலைக்கு வியாபாரங்களை நடாத்திச் செல்வதற்கும் அப்படி இல்லை என்றால் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்கள்**

பெரண்டுவ பிரிவில் புதுலென கிராமத்தில் ஆரம்ப பாடசாலை செயலிழந்து காணப்படுகிறது. ஆனால் ஊர் பெற்றோர் மூலம் மக்கள் 2026 ஆம் ஆண்டிற்கு இந்த ஆரம்ப பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டு உள்ளது. அங்கு காணப்படும் மலசலகூடம் அவதானமான நிலையில் கணப்படுவதால் இந்த மலசலகூடங்களை திருத்துவதற்குதம், விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்து தருமாறு பிரேரிக்கின்றேன்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. கே.பீ. சாந்த குமார குடாவத்த அவர்கள்**

கிரிந்தி எல்ல சுற்றுலாத் தளமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆனால் இங்கு நுழைவு வீதி உகந்த இடத்தில் அமைத்து இல்லாததன் காரணத்தினால் கிரிந்தி எல்ல வீதியை பயன்படுத்திய நபர் ஒருவர் மீண்டும் அவ் வீதியை பயன்படுத்துவது இல்லை எனவும், பெல்மதுள்ள நகரத்தில் இருந்து கிரிந்த எல்லவிற்கு 51/2 KM துரம் இருப்பதாகவும், உடுதுல ஊடாக 3 KM இல் கிரிந்த எல்லவிற்கு பிரயானம் செய்ய முடியும் என்பது பற்றி அவதானம் செலுத்துமாறும், இயற்கை தடாகம் ஒன்றாக அபிவிருத்தி செய்ய முடியுமானால் சுற்றுலாவிற்கு கவர்ச்சியான இடமாக மாற்ற முடியும் என்றும், இந்த நீர்வீழ்ச்சியை அபிவிருத்தி செய்வதானால் முறையான பொறிமுறை ஒன்றின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 02.00 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள